பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

**26 12 2025** **FRIDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய சிறார் விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

2. அனைவரையும் உள்ளடக்கிய திறன் சார்ந்த கல்விக்கு, புதிய தேசிய கல்விக் கொள்கையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக குடியரசுத் துணைத் தலைவர் திரு சி.பி. ராதா கிருஷ்ணன் கூறியுள்ளார்.

3. தீவிரவாத எதிர்ப்பு குறித்த தேசிய மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

4. மாற்றி அமைக்கப்பட்ட ரயில் கட்டணங்கள் இன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

5. துனிஷியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

பிரதமரின் தேசிய சிறார் விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

வீரச் சிறார் தினத்தையொட்டி, இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 18 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 20 சிறுவர்கள் இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் கூறியுள்ளது.

வீர தீரச் செயல்கள் மற்றும் சமூகப்பணிகளில் சிறந்து விளங்கிய சிறுவர்களின் சாதனைக்காக இந்த விருது வழங்கப்படுவதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விருதுபெறும் சிறுவர்களின் பணிகளையும், சாதனைகளையும் விளக்கும் வகையிலான நிகழ்ச்சிக்கும், கலாச்சார நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

விருதுபெறும் சிறார்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்துரையாட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

அனைவரையும் உள்ளடக்கிய திறன் சார்ந்த கல்விக்கு, புதிய தேசிய கல்விக் கொள்கையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக குடியரசுத் துணைத் தலைவர் திரு சி.பி. ராதா கிருஷ்ணன் கூறியுள்ளார்.

பண்டிட் மதன்மோகன் மாளவியாவின் பிறந்த தினத்தையொட்டி, அவரது பணிகள் குறித்த இறுதி புத்தக தொகுப்பை புதுதில்லியில் நேற்று அவர் வெளியிட்டார்.

சிறந்த தேசியவாதியாகவும், பத்திரிகையாளராகவும், கல்வியாளராகவும் திகழ்ந்த மதன்மோகன் மாளவியா, இந்திய பாரம்பரியத்துடன் நவீன கல்வியை வழங்க வேண்டும் என்ற கருத்தை கொண்டிருந்ததாக தெரிவித்தார்.

அதன் அடிப்படையிலேயே அவர் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தை நிறுவியதாக குடியரசு துணைத்தலைவர் கூறினார்.

மதன்மோகன் மாளவியாவின் தொலைநோக்கு பார்வையை பிரதமர் திரு நரேந்திர மோடி முன்னெடுத்துச் செல்வதாக அவர் கூறினார்.

கல்வித்துறையில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள், 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட முக்கிய பங்காற்றும் என்று அவர் தெரிவித்தார்.

நல்லாட்சி தினத்தையொட்டி, புதுதில்லியில் நடைபெற்ற மற்றொரு நிகழ்ச்சியில் பேசிய குடியரசு துணைத்தலைவர், மறைந்த முன்னாள் பிரதமர் பாரத ரத்னா அடல்பிகாரி வாஜ்பாயின் ஆட்சிக்காலத்தில் செயல்படுத்தப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

வாஜ்பாயின் நிர்வாகத்திறன் வலிமையான இந்தியாவிற்கு அடித்தளம் அமைத்ததாக திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தீவிரவாத எதிர்ப்பு குறித்த தேசிய மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இந்த இரண்டு நாள் மாநாட்டை தேசிய புலனாய்வு முகமை ஏற்பாடு செய்துள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் குறித்தும், அதற்கு எதிரான ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

இந்த மாநாட்டில், உள்துறை அமைச்சக அதிகாரிகள், உள்நாட்டு பாதுகாப்புப்படைகளின் பிரதிநிதிகள், சட்ட வல்லுநர்கள், தடயவியல் வல்லுநர்கள் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

<<<<<<>>>>>>

மறைந்த முன்னாள் பிரதமர் பாரத ரத்னா அடல் பிகாரி வாஜ்பாயின் சிந்தனைகளின் அடிப்படையில் பிரதமர் திரு நரேந்திர

மோடி தலைமையிலான மத்திய அரசு வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க செயலாற்றி வருவதாக பிஜேபி தேசிய செயல் தலைவர் திரு நிதின் நபின் கூறியுள்ளார்.

புதுதில்லி கஸ்தூரிபா நகர் பகுதியில் நடைபெற்ற வாஜ்பாய் பிறந்த நாள் விழா கூட்டத்தில் பேசிய அவர், 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைவரின் கூட்டு முயற்சி அவசியம் என்றார்.

வாஜ்பாயின் தத்துவங்களின் அடிப்படையில் பல்வேறு நலத்திட்டங்களை தற்போதைய மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும் திரு நிதின் நபின் கூறினார்.

<<<<<<>>>>>>

மாற்றி அமைக்கப்பட்ட ரயில் கட்டணங்கள் இன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

இதில், புறநகர் மின்சார ரயில்களுக்கான கட்டணங்களில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை.

216 முதல் 750 கிலோமீட்டர் வரையிலான பயணத்திற்கு ஐந்து ரூபாயும், 751 முதல் ஆயிரத்து 250 கிலோமீட்டர் வரையிலான பயணத்திற்கு 10 ரூபாயும், ஆயிரத்து 251 முதல் ஆயிரத்து 750

கிலோமீட்டர் வரையிலான பயணத்திற்கு 15 ரூபாயும் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

விரைவு மற்றும் அதிவிரைவு ரயில்களில் தூங்கும் வசதி மற்றும் ஏசி பெட்டிகளில் கிலோமீட்டருக்கு இரண்டு பைசா கட்டண உயர்வு அமலுக்கு வந்துள்ளது.

முன்பதிவுக்கான கட்டணங்களில் மாற்றம் இல்லை என ரயில்வே தெரிவித்துள்ளது.

இந்த கட்டண உயர்வு இன்று முதல் முன்பதிவு செய்யப்படும் பயணச்சீட்டுகளுக்கே பொருந்தும் என்றும், ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்ட பயணச்சீட்டுகளுக்கு பொருந்தாது என்றும் ரயில்வே கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

தில்லியில் பொது போக்குவரத்தை மேம்படுத்த தில்லி அரசு முக்கிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

தில்லி மெட்ரோ ரயிலில் நேற்று பயணம் மேற்கொண்ட அவர், பயணிகளுடன் கலந்துரையாடினார்.

மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் ஆட்சிக்காலத்தில் தில்லியில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டதாகவும், அவரே

முதல் பயணியாக அதில் பயணித்ததாகவும் திருமதி ரேகா குப்தா குறிப்பிட்டார்.

மெட்ரோ ரயில் திட்டம் விரைவான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்துக்கு முக்கிய பங்காற்றுவதாக அவர் கூறினார்.

மக்கள் அதிக அளவில் பொது போக்குவரத்தை பயன்படுத்துவதன்மூலம், செலவையும், மாசுபாட்டையும் குறைக்க முடியும் என்று திருமதி ரேகா குப்தா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ராஜஸ்தான் மாநிலத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் **92** ஆயிரம் பேர் அரசு பணிகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு பஜன்லால் சர்மா தெரிவித்துள்ளார்.

ஜெய்பூரில் நேற்று நடைபெற்ற மாநில அளவிலான வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்று பேசிய அவர், தனியார் துறையில் இரண்டு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

அடுத்த மூன்றாண்டுகளுக்குள் மேலும் மூன்று லட்சம் அரசு ஊழியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டாண்டுகளில் மாநிலத்தில் எட்டு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீட்டு திட்டங்களுக்கு அடிக்கல்

நாட்டப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் தொழில் வளர்ச்சி அதிகரித்து வருவதாகவும் திரு பஜன்லால் சர்மா கூறினார்.

<<<<<<>>>>>>

ஒடிஷாவில் நகசல் எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி கூறியுள்ளார்.

காவல்துறையினர் செயல்திறனை மேம்படுத்தும் வகையில், 16 மாவட்டங்களில் புதிய பயிற்சி மையங்கள் மற்றும் காவல் நிலையங்களை நேற்று அவர் திறந்துவைத்தார்.

புதிய பயிற்சி மையங்கள் மூலம், ஒரே நேரத்தில் 400 பேர் பயிற்சி பெற முடியும் என்று அவர் கூறினார்.

மத்திய — மாநில அரசுகளின் நடவடிக்கைகள் காரணமாக ஒடிஷாவில் நக்சல் தீவிரவாதம் குறைந்துள்ளதாகவும், பெருமளவிலான நக்சலைட்டுகள் சரணடைந்து வருவதாகவம் அவர் தெரிவித்தார்.

வரும் மார்ச் மாதத்திற்குள் நக்சல் தீவிரவாதத்தை முற்றிலும் ஒடுக்கும் இலக்கு எட்டப்படும் என்று திரு திரு மோகன் சரண் மாஜி கூறினார்.

<<<<<<>>>>>>

பங்களாதேஷில் உள்ள சிறுபான்மையினருக்கு எதிராக நடைபெறும் வன்முறைகளை அந்நாட்டு அரசு தடுக்க தவறிவிட்டதாக அந்நாட்டின் முன்னாள் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா குற்றம் சாட்டியுள்ளார்.

சட்ட விரோதமாக அதிகாரத்தை கைப்பற்றியுள்ள முகமது யூனுஸ் தலைமையிலான அரசு, பங்களாதேஷில் உள்ள சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருப்பதாக குறை கூறியுள்ளார்.

அங்குள்ள மத சிறுபான்மையினர் கடும் இன்னல்களை அனுபவித்து வருவதாகவும் திருமதி ஷேக் ஹசீனா தெsரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

வட மாநிலங்களின் பல்வேறு இடங்களில் இன்றும் கடும் குளிர் நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தில்லி, ஹரியானா, பஞ்சாப், சட்டீஸ்கர், ஜார்கண்ட், உத்தரப்பிரதேசம், மேற்குவங்கம் மற்றும் சிக்கிமின் பல்வேறு இடங்களில் கடும் பனிமூட்டம் நிலவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாநிலங்களின் பல்வேறு பகுதிகளிலும் வரும் ஞாயிற்றுக் கிழமை வரை உறைபனி நீடிக்கும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தில்லியில் காற்றின் தரக்குறியீடு தொடர்ந்து மோசமான நிலையிலேயே உள்ளது.

இன்று காலை 6 மணி நிலவரப்படி, காற்று தரக்குறியீடு 292-ஆக பதிவானதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பைவிட இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை குறைந்து காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உறைபனி நீடிப்பதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சரவணன் 40 Sec.)***

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 6-3 என்ற செட் கணக்கில், இத்தாலியின் **Gabriele Bosio-**வை வென்றார்.

-----------------

சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் மத்தியப்பிரதேசம் — தெலங்கானா அணியையும், சட்டீஸ்கர் — ஒடிஷா அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<<<END>>>>>>**